நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**செம்மை நெல் சாகுபடிக்கு மானியம்**

First Published : 23 Sep 2010 01:24:34 PM IST

பெரம்பலூர், செப். 22: பெரம்பலூர் வட்டார வேளாண்மைத் துறை சார்பில், செம்மை நெல் சாகுபடிக்கு ரூ. 3000 மானியம் அளிக்கப்பட உள்ளதாக வேளாண் உதவி இயக்குநர் எம். செந்தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் வட்டார வேளாண்மைத் துறை மூலம், செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் பெரம்பலூர் வட்டாரத்துக்கு 200 ஹெக்டேர் இலக்கீடு பெறப்பட்டு, செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு அரசு மானியமாக ஹெக்டேருக்கு (2.5 ஏக்கர்) ரூ. 3000 வழங்கப்பட உள்ளது. அதாவது, களை எடுக்கும் கோனோவீடர் கருவி, நடவு செய்ய அடையாளமிடும் மார்க்கர் கருவி, உயிர் உரம், நுண்சத்து உள்ளிட்டவைகளுக்கு ரூ. 3000 மானியம் அளிக்கப்படுகிறது.

செம்மை நெல் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்து, ஹெக்டேருக்கு ரூ. 3000 மானியம் பெறலாம். செம்மை நெல் சாகுபடி என்பது, அனைத்து ரகங்களிலும் அனைத்துப் பருவத்திலும், அனைத்து மண்ணிலும சாகுபடி செய்யலாம். குறிப்பாக, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்கலாம்.

செம்மை நெல் சாகுபடி செய்யும் முறைகள்: ஹெக்டேருக்கு 5 கிலோ விதை. நாற்றின் வயது 8 நாள்கள் முதல் 15 நாள்கள் வரை, ஒற்றை நடவு முறையில் சாகுபடி செய்ய வேண்டும். மார்க்கர் கருவி அல்லது கயிறு மூலம் சதுர முறையில் 25 ஷ் 25 செ.மீட்டர் இடைவெளியில் நடவு செய்து, கோனோவீடர் மூலம் களை எடுக்க வேண்டும். காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

எனவே, செம்மை நெல் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள், பெரம்பலூர் மற்றும் அம்மாபாளையம் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி, மேலும் விவரங்கள் மற்றும் உரிய இடுபொருள்களைப் பெற்று, செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கொடைக்கானலில் பஜ்ஜி மிளகாய் விளைச்சல்  அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 23 Sep 2010 12:54:15 PM IST

கொடைக்கானல்,செப்.22: கொடைக்கானலில் பஜ்ஜி மிளகாய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கொடைக்கானல் பகுதியில் காய்கறி,பழ வகைகளை அதிகமாகப் பயிரிட்டு வரும் விவசாயிகள், இயற்கையாக கிடைக்கும் தேன்,மூலிகைகளாலும் பயனடைந்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக பஜ்ஜி மிளகாய் விவசாயத்தில் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளனர். பஜ்ஜி மிளகாய் சாகுபடிக்கு அதிகப் பராமரிப்பு தேவையில்லை. போதிய அளவு தண்ணீர், ஓரளவுக்கு சத்தான உரமிட்டுப் பராமரித்தாலே நல்ல விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். ஆண்டு முழுவதும் சாகுபடி செய்ய ஏற்ற இந்த மிளகாய்ச் செடிகள், நடவு செய்து 3 மாதத்தில் விளைச்சல் தருகிறது.

ஊட்டியில் மட்டுமே இந்த மிளகாய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது கொடைக்கானல் அருகேயுள்ள வில்பட்டி, பள்ளங்கி, கோம்பை, அட்டுவம்பட்டி, செண்பகனூர், சகாயபுரம், மாட்டுப்பட்டி, பேத்துப்பாறை, பெருமாள்மலை ஆகிய பகுதிகளிலும் அதிக அளவில் மாற்றுப் பயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அப் பகுதியில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து செண்பகனூர் விவசாயி சேகர் கூறியது: இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் காய்கறி விளைச்சல் குறைந்துப் போனது. அதேசமயம், பிற காய்கறிகளுடன் மாற்றுப் பயிராக பஜ்ஜி மிளகாயும் சாகுபடி செய்தோம். நலல விளைச்சல் கிடைத்துள்ளது. தற்போது இந்த பஜ்ஜி மிளகாய்க்கு சுற்றுலா தலங்களில் அதிக கிராக்கி உள்ளது. அதனால் பஜ்ஜி மிளகாய் விலை கிலோ ரூ. 25 முதல் ரூ. 30 வரை விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

**நெற்பயிரைத் தாக்கும் நோய்களை கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 23 Sep 2010 10:43:38 AM IST

சங்ககிரி, செப். 22: நெற்பயிரைத் தாக்கும் நோய்களை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்தி:

விதை நேர்த்தி செய்து, நோய் எதிர்ப்பு ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். நோய் பாதிக்கும் இடங்களில் நெருக்கி நடவு செய்வதைத் தவிர்க்க வேண்டும். இதனால் இலைகளின் நடுவே

காற்றின் ஈரப்பதம் குறைந்து நோய் உண்டாகும் சூழ்நிலையைத் தவிர்க்க முடியும். வயலில் களைக் கட்டுப்பாடு மிகவும் அவசியம்.

களை எடுக்கும் போதே அடித்தூர்களில் உள்ள காய்ந்த இலைகளையும் அகற்ற வேண்டும். இதன் மூலம் நோய்க் காரணிகளை நீக்கமுடியும். இதனால் கூடுதல் சாகுபடி செலவு ஏற்படாது. அதிக தழைச்சத்து இடுவதால் அடர்த்தியான இலைகள் தோன்றி நோய்கள் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். சரியான நேரத்தில் பயரின் தேவையறிந்து உரமிடுவது சிறந்தது.

**விவசாயிகள் கவனத்திற்கு...சூரியகாந்தி பயிர் சந்தை நிலவரம்**

First Published : 23 Sep 2010 09:51:44 AM IST

விருத்தாசலம், செப். 22: விருத்தாசலம் கோட்டம் நல்லூர் மற்றும் மங்களூர் ஒன்றியத்தில் கார்த்திகைப் பட்டத்தில் அதிக அளவில் சூரியகாந்தி பயிரிடப்படுகிறது. விவசாயிகள் சூரியகாந்தி பயிரிடுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தேசிய உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் சூரியகாந்தியின் தேவை, விலை மற்றும் சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து விலை முன் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

÷இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குநர் தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

÷சூரியகாந்தி பயிரானது கார்த்திகை மற்றும் சித்திரைப் பட்டங்களில் பயிரிடப்படுகிறது. சந்தை மூலங்களின்படி அதிகமான வரத்து மார்ச், மே, ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பெறப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது சித்திரைப் பட்டத்தில் விளைவித்த சூரியகாந்தி சந்தைக்கு வரத்தொடங்கியுள்ளது. தமிழகத்தில் வெள்ளக்கோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஆகியவை முக்கிய சூரியகாந்தி சந்தை மையங்களாகும்.

÷2009-2010-ம் ஆண்டில் உணவு எண்ணெய் இறக்குமதி 8.6 மில்லியன் டன்னாகவும், அதில் பாமாயில் சுமார் 6.95 மில்லியன் டன்னாகவும், சோயா எண்ணெய் 1.0 மில்லியன் டன்னாகவும், சூரியகாந்தி 60,000 டன்னாகவும், இதர எண்ணெய் வகைகள் 40,000 டன்னாகவும் இருக்கும் என வர்த்தக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

÷தமிழக விவசாயிகள் அதிகப்படியாக இறக்குமதி செய்யப்படும் பாமாயிலினால் எதிர்வரும் மாதங்களில் சூரியகாந்தி விலை குறையுமா மற்றும் அறுவடை செய்த சூரியகாந்தியை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து வைத்து விற்பதா என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். அவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப்

புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக வெள்ளக்கோவில் சந்தையில் நிலவிய விலையை ஆய்வு செய்தது.

÷சாதாரணமாக 1 ஏக்கர் நீர்ப்பாசன நிலத்தில் 800-1100 கிலோ வரை சூரியகாந்தி மகசூல் கிடைக்கிறது. ஆனால் இப்பருவத்தில் தரமற்ற விதை, பூச்சித் தாக்குதல், வேலையாட்களின் தட்டுப்பாடு மற்றும் தொடர்ந்து சூரியகாந்தியையே பயிரிட்டது ஆகியவை 450-500 கிலோ வரை மகசூல் குறைவதற்கான முக்கிய காரணங்களாகும்.

÷மேலும் ஆய்வு முடிவுகளின்படி செப்டம்பர்-அக்டோபர் வரை சூரியகாந்தி விதை விலை கிலோ ஒன்றுக்கு |23-26 ஆக இருக்கும். உயர்ரக விதைகளுக்கு |30 வரை கிலோவுக்கு விலை கிடைக்கும். நவம்பர் மாதத்தில் விலை குறையவும் வாய்ப்பு இருக்கிறது.

÷எனவே விவசாயிகள் சூரியகாந்தி விதையை அறுவடை செய்ததும் உடனே விற்றுவிடும்படி பரிந்துரைக்கப்படுகின்றனர் என தெரிவித்துள்ளனர்.

**நுண்ணீர் பாசன முறையில் செம்மை நெல் சாகுபடி: ஆட்சியர் வலியுறுத்தல்**

First Published : 23 Sep 2010 10:07:31 AM IST

திருவள்ளூர், செப். 22: நுண்ணீர் பாசன முறையில் செம்மை நெல் சாகுபடி செய்தால் அதிக பயனடையலாம் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டி.பி. ராஜேஷ் தெரிவித்தார்.

÷காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் நுண்ணீர் பாசனம், விவசாய கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்தல் மற்றும் உழவர் மன்றங்கள் தொடக்க விழா கருத்தரங்கில் ஆட்சியர் டி.பி.ராஜேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

÷இவ்விழாவுக்கு மண்டல இணைப் பதிவாளர் அமலதாஸ் தலைமை தாங்கினார். திருவள்ளூர் சரக துணைப் பதிவாளர் தமிழ்ச்செல்வி வரவேற்றார். காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

÷இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் பங்கேற்று பேசியது: தற்போது இம்மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நுண்ணீர் பாசன முறையில் செம்மை நெல் சாகுபடி திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இத்திட்டத்தின் அம்சங்களை விவசாயிகளிடம் எடுத்துச் சென்று அவர்கள் அத்திட்டத்தில் பயனடையும் வரை அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

÷சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிடும்போது ஒவ்வொரு துளி நீரிலும் அதிக மகசூலும், அதிக லாபமும் விவசாயிகள் பெற வழி வகுக்கும். இதுவரை வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு ரூ.100 கோடி வரையிலான திட்டங்கள் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

÷இப்போது இங்கு ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் மூலம் நாற்று நடும் முறையை செய்து காண்பித்தார்கள். இந்த செயல் முறையை இம்மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குறுவட்டத்திலும் முறைப்படி விவசாயிகளுக்கு அறிவிப்பு செய்து அவர்களிடம் இயந்திரத்தை எடுத்துச் சென்று செயல்முறை விளக்கங்களை செய்து காண்பிக்க வேண்டும்.

÷அதுமட்டுமல்லாமல் அனைத்து அதிகாரிகளும் வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒருமுறை விவசாயப் பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும்.

÷இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலை இணை இயக்குநர் ரஞ்சன்பால், மாவட்ட நபார்டு அலுவலர் சுரேஷ், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கச் செயலர் சீனன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கருத்தரங்க ஏற்பாடுகளை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் பாரதி, கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் கோபிநாத் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

First Published : 23 Sep 2010 10:39:22 AM IST

திருவண்ணாமலை, செப்.22:தமிழக அரசின் 2 ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருவண்ணாமலை கோட்டாட்சியர் அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் வட்டச் செயலர் இரா.வீரபத்திரன் தலைமை தாங்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் கு.ஜோதி கண்டன உரையாற்றினார். விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் தி.ராஜேந்திரன், தலைவர் வே.முத்தையன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

பெரும்பாக்கம் கிராமத்தில் 17 ஆண்டுகளாக புறம்போக்கு நிலத்தில் வசித்துவரும் 19 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு நிலப்பட்டா வழங்கக் கோருவது உள்ளிட்ட பல்வேறுகோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**காளான் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 23 Sep 2010 12:55:34 PM IST

கொடைக்கானல், செப். 22: கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் தோட்டக்கலைத் துறை சார்பில் ஆத்மா திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு பெண்களுக்கு காளான் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண் இணை இயக்குநர் கணேசன் தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை இயக்குநர் இமாம்தீன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் கிஷோர்குமார் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகப் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி பயிற்சி வழங்கினார். முகாமில் சுரேஷ், லதா உள்பட

கொடைக்கானல் பகுதிகளிலுள்ள 50-க்கும் மேற்பட்ட சுய உதவிக்குழு பெண்கள் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலைத் துறைக்கு தனி பல்கலை.: அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்**

First Published : 23 Sep 2010 11:31:41 AM IST

ஏற்காடு, செப். 22: தோட்டக்கலைத் துறைக்கென தனியாகப் பல்கலைக்கழகம் அமைக்கப் பரிசீலிக்கப்படும் என வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி எஸ். ஆறுமுகம் தெரிவித்தார்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 36 ஏக்கர் பரப்பளவில் |11.26 கோடி செலவில் அமையவுள்ள தாவரவியல் பூங்காவுக்கான அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை நடந்தது. குத்துவிளக்கேற்றி அடிக்கல் நாட்டி, அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் பேசியது:

கடந்த 2005-ம் ஆண்டு செப்டம்பரில் ஏற்காட்டில் தங்கிய முதல்வர் அறிவுறுத்தியபடி தமிழகத்தின் மிகப் பெரிய தாவரவியல் பூங்கா அமைக்கும் திட்டம் உதயமானது. கர்நாடகா, ஆந்திரா, புதுவை மற்றும் கேரள சுற்றுலாப் பயணிகள் மகிழும் வகையில் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இலை அழகு, மர மலர்கள், தாவர உருவங்கள், போன்சாய், புல் தரை மலர்ப் படுக்கை, மூலிகைப் பூங்கா, மரவகைகள், பட்டாம் பூச்சி, உள்ளூர் தாவரங்கள், கண்ணாடி மாளிகை, பனை வகை, கல் தோட்டம், பாலைவனம், நீர் நிலை, செம்பருத்தி, சிறுவர் பூங்கா உள்ளிட்ட 24 வகைப் பூங்காக்கள் இங்கு அமைய உள்ளன.

குற்றாலத்தில் ரூ. 5.92 கோடி செலவிலும் சென்னை மாதவரத்தில் 28 ஏக்கர் பரப்பளவில் ரூ. 5.93 கோடி செலவிலும் பூங்காக்கள் அமையவுள்ளன. கொடைக்கானல் பூங்காவை மேம்படுத்த |1. 59 கோடி, உதகை தாவரவியல் பூங்காவை மேம்படுத்த |1.50 கோடியும் ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்துவருகின்றன.

சென்னை அண்ணா சிலை அருகே 21 ஏக்கரில் பூங்கா அமைக்க |21 கோடி ஒதுக்கப்பட்டுப் பணி நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் தோட்டக்கலைத் துறைக்கென தனியாகப் பல்கலைக்கழகம் அமைக்கப் பரிசீலிக்கப்படும்.

ஏற்காட்டுக்கு கடந்த ஆண்டு 10.07 லட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 7476 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வந்துள்ளனர். வெளிநாட்டுப் பயணிகள் மூலம் அன்னியச் செலாவணியும் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விழாவில், 752 பயனாளிகளுக்கு |21.92 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறை மேலாண்மை இயக்குநர் பி.சந்திர மோகன் வரவேற்றார். வேளாண்மைத்துறை முதன்மைச் செயலர் பா.ராமமோகனராவ் தலைமை வகித்தார். எம்.பி.க்கள் கே.பி.ராமலிங்கம், ஆதி.சங்கர், ஏற்காடு எம்.எல்.ஏ.சி.தமிழ்ச் செல்வன், சேலம் மாநகராட்சி மேயர். ஜெ. ரேகாபிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மைத்துறை ஆணையர் சி.கோசலராமன், வேளாண் விற்பனை, வணிகத்துறை ஆணையர் அதுல் ஆனந்த், சேலம் மாவட்ட ஆட்சியர் ஜெ.சந்திரகுமார் ஆகியோர் பங்கேற்றனர். தோட்டக்கலை துணை இயக்குனர் இ. கக்கன் நன்றி கூறினார்.

**தலையங்கம்: முன்னுரிமை விவசாயிக்கே!**

First Published : 24 Sep 2010 12:14:00 AM IST

Last Updated : 24 Sep 2010 12:51:00 AM IST

பருத்தி ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி திருப்பூரில் இன்று முதல் (செப்.24) 48 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு அமைப்புகளும், தொழில்துறையும், தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

அவரவர் தொழில்துறையின் பிரச்னைக்காகப் போராட்டம் நடத்துவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், தீபாவளிக்கு துணி விலை 40 விழுக்காடு உயரும் என்று செய்தி அறிக்கை வெளியிட்டு, ஏற்கெனவே உற்பத்தியான விற்காத துணிகளுக்கும் விலைகூட்டும் யோசனையை, ஒரு வைக்கோல் போரில் தீக்குச்சியைக் கொளுத்திப் போடுவதைப் போல போடுவது சரிதானா?

பருத்தி ஏற்றுமதி எல்லாக் காலத்திலும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இப்போது அரசு அறிவித்துள்ள அறிவிப்பின்படி, வரும் அக்டோபர் 1-ம் தேதி முதலாக, பருத்தி ஏற்றுமதிக்கான உரிமம் பெற்றிராத நிறுவனங்களும் ஏற்றுமதி செய்யலாம் என்றும், பருத்தி ஏற்றுமதியில் ஏப்ரல் மாதம் அரசு அமல்படுத்திய ஒரு டன் பருத்திக்கு ஏற்றுமதி வரி ரூ.2500 (53.68 அமெரிக்க டாலர்) விலக்கிக் கொள்ளப்படுகிறது என்பதும்தான் அரசு முடிவில் தற்போது புதியவை.

ஏற்றுமதி வரிவிதிப்பை விலக்கிக் கொள்ளக் காரணம் குஜராத் மாநிலத்தின் கோரிக்கைதான். இந்தியாவில் குஜராத் மாநிலம் தான் மிகஅதிகமாக (165 லட்சம் பேல்கள் - ஒரு பேல் என்பது 170 கிலோ) பருத்தி உற்பத்தி செய்யும் மாநிலம். இதற்கு அடுத்ததாக ஆந்திர மாநிலம் சுமார் 80 லட்சம் பேல்கள் உற்பத்தி செய்கிறது. தமிழகத்தின் பருத்தி உற்பத்தி வெறும் 6 லட்சம் பேல்கள் மட்டுமே.

இந்த ஆண்டு பருத்தி விளைச்சல், சென்ற ஆண்டைக் காட்டிலும் சிறப்பாக அமைந்த காரணத்தால், குஜராத் மாநிலம்தான் ஏற்றுமதி வரியை விலக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. ஏனென்றால், இந்திய ஏற்றுமதியில் பாதி குஜராத் மாநிலத்திலிருந்து செல்கிறது. விளைச்சல்

நன்றாக இருக்கும் நேரத்தில் ஏற்றுமதியைத் தடுக்கும் நோக்குடன் வரி விதிப்பதால், கடைசியாக விவசாயிகள்தான் பாதிக்கப்படுவார்கள் என்று கருத்து தெரிவிக்கப்பட்டதாலும், உண்மையாகவே பருத்தி உற்பத்தி அதிகமாக இருப்பதாலும் அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது.

பருத்தி ஆலோசனை வாரியம் அண்மையில் நடத்திய கூட்டத்தில், இந்த ஆண்டு 285 லட்சம் பேல்கள் உற்பத்தியாகும். இவற்றில் 245 லட்சம் பேல்கள் உள்ளூர் சந்தையின் தேவைக்குப் போதுமானவை. அபரிமிதமாக சென்ற ஆண்டு கையிருப்பில் 55 லட்சம் பேல்களும், இந்த ஆண்டு 40 லட்சம் பேல்களும் இருக்கும். பருத்தி அதிகமாகத் தங்கினால் விலையை மிகவும் குறைத்துவிடுவார்கள். இதனால் 30 லட்சம் விவசாயிகளின் குடும்பம் பாதிக்கும். ஆகவே உபரி பருத்தியை ஏற்றுமதி செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. வரியை விலக்கிக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

உரிமம் இல்லாதவர்கள்கூட பருத்தி ஏற்றுமதியில் ஈடுபடலாம் என்கிற அரசின் முடிவால், யூக பேர வணிகர்களும் அரசியல் தலைகளுக்கு நெருக்கமான வணிகர்களும் உள்ளே புகுந்து, கொள்ளை லாபம் சம்பாதிக்க வழி ஏற்படுத்தப்பட்டிருப்பது உண்மை. இவ்வாறு உரிமம் பெறாதவர்கள் ஏற்றுமதி செய்வதைத் தடுக்கவும், அது மட்டுமன்றி, இந்த ஆண்டு உபரி உற்பத்தியாகக் கருதப்படும் சுமார் 50 லட்சம் பேல்களை மட்டுமே ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைப்பதுதான் விவசாயிகளுக்குச் சாதகமாக அமையும்.

இப்போது பருத்தி விவசாயிகளிடம் ஒரு கேண்டி (356 கிலோ) பருத்தி 28,000க்கு வாங்கும் பருத்தி வணிகர்கள், அதை விற்கும் விலை இப்போது 39,000. எந்த உழைப்பும் இல்லாமல், வியர்வை சிந்தாமல் காட்டன் டிரேடர்ஸ் ஒரு கேண்டிக்கு அடிக்கும் லாபம் 11,000.

பருத்தி விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொள்ள பஞ்சாலைகள் முன்வர வேண்டும், அல்லது பஞ்சாலைகள் சில ஒன்றிணைந்து பருத்தி விவசாயிகளின் நிலத்தில் விளையும் பருத்தியை முழுமையாக எடுத்துக்கொள்ளவும், விவசாயிக்கு குறிப்பிட்ட தொகையை அளிக்கவும் பண்ணை ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் நடைமுறைகளை ஆலோசிக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டாலும், இவை எதற்குமே ஜவுளி ஆலைகள் முக்கியத்துவம் தரவில்லை. "பருத்தியை விளைவித்துக் கொண்டுவா, குறைந்த விலையில் வாங்குவோம். இல்லையானால் இறக்குமதி செய்துகொள்வோம்' என்கிற மனப்பான்மையில்தான் ஜவுளி ஆலைகள் செயல்பட்டன. செயல்படுகின்றன.

கரும்பு விவசாயிகளை உறுப்பினர்களாக்கி, அவர்களுக்கு அரசு நிர்ணயிக்கும் விலையைவிடக் கூடுதல் விலை தருவதற்கும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும் செய்கிற சர்க்கரை ஆலைகள் போல, பஞ்சாலைகளும் பருத்தி விவசாயிகளை தங்களிடம் தக்க வைத்துக்கொண்டால் இத்தகைய அச்சமும், அவதியும் ஏற்படுமா?

அரசின் புதிய நடைமுறை அடுத்தமாதம் தான் தொடங்குகிறது. அதற்குள்ளாகவே, தீபாவளி (நவம்பர் 5) துணி விலை 40 விழுக்காடு உயரும் என்று சொல்வதன் மூலம் அரசை மிரட்டுகிறார்களா அல்லது ஜவுளிக்கடைகளுக்கு ஆலோசனை தருகிறார்களா?

பருத்தி உற்பத்தி அபரிமிதமாக இருப்பதால், பின்னலாடைகளுக்கான நூல் விலை உயராமல் அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை வைப்பதுதான் நியாயமாக இருக்கும்.

உணவு தானியக் கிடங்குகளில் தேங்கிக் கிடந்து வீணாகும் அரிசி, கோதுமை போன்ற தானியங்களைப்போல, தேவைக்கு அதிகமாக விளைந்திருக்கும் பருத்தியும்கூட மழையால் பாதிக்கப்பட்டு வீணாகக்கூடும். அதைவிட, உபரியாக விளைந்த பருத்தியை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதுதானே புத்திசாலித்தனம்!

பருத்தி ஏற்றுமதிக்கு உரிமம் பெறாத நிறுவனங்களுக்கான அனுமதி ரத்து செய்யப்பட வேண்டும் என்பதுமட்டுமே நியாயமான கோரிக்கை. பிரச்னையை விட்டுவிட்டு, துணி விற்பனைக்கு ஆலோசனை தருவதும், மக்களைப் பீதிக்குள்ளாக்குவதும் முறையல்ல. விவசாயிகளின் நலனுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

தினமலர்

**விவசாயிகளுக்கு மானியத்தில் உரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,22:12 IST

ஸ்ரீமுஷ்ணம் : ஸ்ரீமுஷ்ணத்தில் தோட் டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு முழு மானியத்தில் உரங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் துல்லிய பண்ணையம் திட்டத்தின் கீழ் சொட்டு நீர்பாசனம் அமைத்த விவசாயிகளுக்கு முழு மானியத்தில் உரங்கள் வழங்கப் பட்டன. காட்டுமன்னார் கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்தாஸ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 1.5 லட்சம் ரூபாய் மதிப்பிலான உரங் களை விவசாயிகளுக்கு வழங்கினார். இதில் துல்லிய பண் ணை விவசாயிகள் சங்க தலைவர் பிச்சைபிள்ளை, உதவி வேளாண்மை அலுவலர்கள் அருள், இன்பம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**மலர், பழ சாகுபடிக்கு மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,20:58 IST

மயிலம் : மயிலம் ஒன்றியத்தில் தேசிய தோட்ட கலை இயக்கம் சார்பில் மலர், பழ சாகுபடிக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இது குறித்து மயிலம் வட்டார தோட்டக கலைத் துறை உதவி இயக் குனர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மயிலம் வட்டாரத்தில் புதியதாக வாழைப் பயிரிடும் விவசாயிகளுக்கு தரமான உயர் விளைச்சல் திசு வாழை கன்றுகள் 5 எக்டேர் பரப்பளவில் எக்டேருக்கு 31 ஆயிரத்து 200 ரூபாய், தேவையான இடு பொருட்களும், தரமான வாழை கன்றுக்கும் 10 எக்டர் பரப்பளவில் எக்டேருக்கு 16 ஆயிரத்து 875 ரூபாய் மானியம் வழங்கப்படும்.

மா சகுபடி பதியதாக நடப்பு பருவத்தில் பயிரிட விரும்பும் விவசாயிக்கு தரமான உயர் விளைச்சல் கன்றுகளும், தோட்டக் கலைத் துறை மூலம் இடு பொருட்கள் மானியமாக 9900 ரூபாய் வழங்கப்படும். கொய்யா சகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கொய்யா செடிகளும், இடு பொருட்களுக்கான மானியம் எக்டேருக்கு 18 ஆயிரத்து 834 ரூபாய் வழங் கப்படும். மலர் சாகுபடிக்கு உயர் விளைச் சல் தரக் கூடிய சம்பங்கி பயிருக்கு எக்டேருக்கு 45 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். கனகாம்பரம் செடிக்கு 2 எக்டேர் பரப்பளவில் ஒரு எக்டேருக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த திட்டம் மூலம் பயிரிட விரும்பும் விவசாயி புகைப்படம், ரேஷன் கார்டு நகல், நில உடமை ஆவணங்களுடன் கூட் டேரிப்பட்டில் உள்ள தோட்ட கலைத் துறையின் உதவி வேளாண்மை இயக்குனரை அணுகி பலன் பெறலாம். மேலும் விவரத்திற்கு 94421 79859, 88709 68345 என்ற மொபைல் எண்க ளில் தொடர்பு கொள்ளலாம். இவ் வாறு செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

**காய்கறி பயிர் சாகுபடிக்கு மானிய விலையில் விதை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,02:20 IST

நாமக்கல்: "புதுச்சத்திரம் வட்டாரத்தில் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானிய விலையில் விதைகள் வழங்கப்படும்' என, தோட்டக்கலை உதவி இயக்குனர் சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:புதுச்சத்திரம் வட்டாரத்தில் பரவலாக மழை பொழிவு ஏற்பட்டுள்ளது. இது காய்கறி சாகுபடி செய்வதற்கு ஏற்ற தருணம். காய்கறி சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விதைகள் வைக்கப்பட்டுள்ளன.இங்கு தக்காளி விதை பி.கே.எம் 1, பகால் விதை கோ 1, மிளகாய் விதை கே 1, வெண்டை விதை நெ 10  உள்ளிட்டவை இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவற்றை விவசாயிகள் 50 சதவீத மானிய விலையில் பெற்று பயனடையலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமராவதி பாசனத்தில் மழையின்றி நெல், சோளம் விதைப்பு பணி தாமதம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,02:36 IST

தாராபுரம்: தாராபுரம் அமராவதி பாசனப் பகுதியில் பருவ மழை பெய்யாததால் நெல், மக்காச்சோளம் விதைகளை விதைக்க முடியாமல் விவசாயிகள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.ஆடி மாதத்தில் பருவ மழையை எதிர்பார்த்து விவசாயிகள் தங்கள் விளைநிலங்களை பண்படுத்தி நடவு செய்ய தயார் நிலையில் வைத்திருப்பது வழக்கம். சில ஆண்டுகளாக மக்காச்சோளத்துக்கு நல்ல விலையிருப்பதால், விவசாயிகள் ஆர்வத்துடன் மக்காச் சோளம் பயிரிடுகின்றனர்.

நடப்பாண்டு மக்காச்சோளம், நெல் விதைகளை முன் கூட்டியே விவசாயிகள் வாங்கிவைத்து மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களான நிலையில், இன்னும் பருவ மழை பெய்யவில்லை. அமராவதி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியிலும் போதிய மழையின்மையால், அணையிலிருந்து தண்ணீர் திறக்க முடியாத சூழ்நிலையுள்ளது. தோட்டக்கிணறுகளிலும் தேவையான தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் மிகுந்த மன உளைச்சலில் உள்ளனர்.

சென்றாண்டு நெல் நடவு செய்ய வேண்டாம் என வேளாண் துறையினர் எச்சரிக்கை விடுத்ததால், ஒரு சில விவசாயிகள் நெல் சாகுபடி செய்யாமல் இழப்பை தவிர்த்துக் கொண்டனர். நடப்பாண்டு விவசாயிகளுக்கு போதிய அறிவுரை வழங்காததால், பல ஆயிரம் ரூபாய் மதிப்பில் விதை, உரம், பூச்சிக்கொல்லி உள்பட பல்வேறு பொருட்களை வாங்கி வைத்துக்கொண்டு, வருண பகவானின் கருணையை எதிர்பார்த்து விவசாயிகள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

**தென்னை சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்தால் அதிக லாபம் ஈட்ட முடியும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,00:00 IST

ஆனைமலை : "தென்னை சார்ந்த பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக லாபம் ஈட்ட முடியும்' என, ஆழியாறில் நடந்த பயிற்சி முகாமில் வலியுறுத்தப்பட்டது. ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையத்தில், தென்னை சாகுபடி சான்றிதழ் பாட பயிற்சி வகுப்புகள் துவக்க விழா நடந்தது. ஆராய்ச்சி நிலைய பயிர் நோயியல் துறை இணை பேராசிரியர் ஷீலா வரவேற்றார். புத்தூர் பாசன சபை தலைவர் கல்யாணராகவன் முன்னிலை வகித்தார்.

ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம் தலைமை வகித்து பேசியதாவது: தென்னை சாகுபடி குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாடு வேளாண் பல்கலையும், தொலை தூர கல்வி இயக்ககம் சார்பில் பயிற்சி வழங்கப்படுகிறது. தென்னை மரங்களுக்கிடையே "கோ-கோ' பயிரை ஊடு பயிராக சாகுபடி செய்வதன் மூலம் கூடுதல் லாபம் பெறலாம். தென்னையிலிருந்து கிடைக்கும் பொருட்களிலிருந்து 12 பொருட்கள் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். நார், தேங்காய் தொட்டி உள்ளிட்ட பொருட்களை கொண்டும், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை செய்து அன்னிய செலவாணியை ஈட்டலாம். ரோட்டோரங்களில், வீணாக கொட்டப்படும் மஞ்சியை விஞ்ஞான முறையில் மக்கும் உரமாக மாற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இஸ்ரேல், ஈரான், ஈராக் உள்ளிட்ட நாடுகளில், மக்கும் உரத்திற்கு வரவேற்பு உள்ளது.

பொள்ளாச்சியை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் பலர் இதுபோன்று உரங்கள், தேங்காய் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து லாபம் ஈட்டி வருகின்றனர். இவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சி நிறைவு செய்யும் விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும். சான்றிதழ் பெறும் விவசாயிகளின் தோட்டங்களில், தாய் மரங்கள் இருந்தால் நாற்றாங்கால் பண்ணை அமைக்கலாம். இதற்காக, தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் மூன்று முதல் ஐந்து லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்குகிறது. இதற்கு, தென்னை சார்ந்த அடிப்படை அறிவு தேவைப்படுகிறது. அடிப்படை அறிவை மேம்படுத்தும் வகையில், இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இரண்டு பிரிவாக, நடக்கும் பயிற்சி வகுப்புகளில் மொத்தம் 60 விவசாயிகள் பங்கேற்கின்றனர். இவ்வாறு, தலைவர் ராஜமாணிக்கம் பேசினார். பொள்ளாச்சி இருதய நோய் நிபுணர் மகேந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர். உதவி பேராசிரியர் ஜான்சன் நன்றி கூறினார்.

**எண்ணெய் வித்து பயிர்களுக்கு மானியம்: ரூ.25 லட்சம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,00:27 IST

திருப்பூர் : எண்ணெய் வித்து பயிர்களுக்கு வேளாண் துறை சார்பில் மானியம் வழங்க, திருப்பூர் மாவட்டத்துக்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; மானியம் பெற, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் "ஐசோபார்ம்' திட்டத்தின் கீழ், எண்ணெய் வித்து பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஆதார விதை மற்றும் சான்று விதை உற்பத்திக்கு விதை வினியோகம், சான்று விதை கொள்முதல், செயல்விளக்கம், உயிர் உரங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது: எண்ணெய் வித்து பயிர் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக, மத்திய அரசின் "ஐசோபார்ம்' திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்துக்கு 24.7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதார விதை உற்பத்தியில் 100 குவிண்டாலுக்கு, ஒரு லட்ச ரூபாய் மானியம்; ஒரு கிலோவுக்கு 10 ரூபாய் வழங்கப்படும். சான்று விதை உற்பத்தியில் 500 குவிண்டாலுக்கு, கிலோ 10 ரூபாய் வீதம் ஐந்து லட்ச ரூபாய் மானியம்; சான்று விதை கொள் முதல் செய்வதற்கு 500 குவிண்டால், கிலோ 12 ரூபாய் வீதம் ஆறு லட்ச ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. கிணற்றில் இருந்து பயிர் செய்துள்ள நிலப்பரப்புக்கு குழாய் அமைக்க, 6.6 லட்சம் மதிப்பில் 44 யூனிட்டுக்கு மானியம்; செயல்விளக்கம் முறையில் தலா 4,000 வீதம் மூன்று பேருக்கு 12 ஆயிரம் மானியம்; நிலக்கடலைக்கு மூன்று பேர், எள் இரண்டு பேர், சூரியகாந்தி ஒன்பது பேர் என 14 பேர் செயல்விளக்க திடல் அமைக்க 38 ஆயிரம் மானியம்; ஜிப்சம் உர வினியோகத்தில் 180 ஹெக்டருக்கு 1.35 லட்சம் மானியம்; ஒரு ஹெக்டருக்கு 200 கிலோ ஜிப்சம் வழங்கப்படுகிறது.

உயிர் உரங்கள் வினியோகத்தில் 2,500 ஹெக்டருக்கு 2.5 லட்சம்; உயிரியல் காரணிகள் (பூச்சிகொல்லி) 40 ஹெக்டருக்கு 4,000 ரூபாய்; பயிர் பாதுகாப்பு கருவியான கை தெளிப்பான் 20 எண்ணிக்கைக்கு 16 ஆயிரம் (ஒரு கை தெளிப்பானுக்கு 800 ரூபாய்); பவர் ஸ்பிரேயர் 20 எண்ணிக்கைக்கு 40 ஆயிரம் (ஒரு ஸ்பிரேயருக்கு 2,000 ரூபாய்); விவசாயிகளின் பயிற்சி முறைக்கு, நான்கு நபர்களுக்கு 60 ஆயிரம் (விவசாயிக்கு 15 ஆயிரம்); உரச்சத்து தெளிப்பில் 10 ஹெக்டருக்கு 20 ஆயிரம் (ஹெக்டருக்கு 2,000) என மானியம் அளிக்கப்படுகிறது. மானியம் பெற்று பயனடைய விரும்பும் விவசாயிகள், வட்டார வேளாண் உதவி இயக்குனர் அல்லது களப்பணியாளரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, முத்துசாமி தெரிவித்தார்.

**பருத்தி வரத்து அதிகரிப்பு; ரூ.5 லட்சத்துக்கு வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,00:17 IST

அவிநாசி : அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு வரத்து அதிகரித்திருந்தது; இந்த வாரம் டி.சி.எச்., ரகம் வரத்தில்லை. அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு 430 மூட்டை பருத்தி வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 210 மூட்டை அதிகம். இருப்பினும், பருத்தி ரகங்களின் விலை கடந்த வாரத்தை காட்டிலும் குவிண்டாலுக்கு ரூ.100 முதல் ரூ.200 வரை குறைந்தது. இந்த வாரம் டி.சி.எச்., ரகம் வரத்தில்லை. இந்த வார ஏலத்தில் அனைத்து பருத்தி ரகங்களின் விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.3,500 முதல் ரூ.4,000 வரை, ஆர்.சி.எச்., பென்னி மற்றும் சுரபி ரூ.3,900 முதல் ரூ.4,300 வரை, மற்றும் மட்ட ரகம் ரூ.1,600 முதல் ரூ.1,900 வரை.

அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: சென்ற வாரத்தை விட வரத்து அதிகரித்திருந்தாலும், விலை சற்று குறைந்தது. பண்டிகை சமயமாக இருப்பதால், கேட்பு சற்று குறைந் துள்ளது. இருப்பினும் வரும் வாரங்களில் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. கோபி, சத்தி, தர்மபுரி பகுதியில் இருந்து 36 விவசாயிகள் பங்கேற்றனர்; ரூ.5.16 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது, என்றார்.

**கூட்டுறவு சங்கங்களில் பயிர் காப்பீடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,02:32 IST

மதுரை : மதுரை மாவட்டத்தில் சம்பா மற்றும் குறுவை பருவத்திற்கு விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு, தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் காப்பீடு செய்யப்படுகிறது.

பயிர்க்கடன் பெறும் விவசாயிகளிடம் காப்பீடு கட்டாயத்தின் பேரிலும், கடன் பெறாத விவசாயிகளிடம் விருப்பத்தின் அடிப்படையிலும் பிரீமியம் வசூலிக்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு பிரீமியத்தில் 55 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. பயிர் காப்பீடு தொடர்பான படிவத்தை பூர்த்தி செய்து வி.ஏ.ஓ., அல்லது உதவி வேளாண் அலுவலர் சான்றுடன், பிரீமியத்தை செலுத்த வேண்டும்.

நெற்பயிர் ஒரு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் 118, இதர விவசாயிகள் 131 ரூபாய் மானியம்

நீங்கலாக பிரீமியம் செலுத்தலாம். விபரங்களுக்கு இணைப்பதிவாளர் 94429-27878, துணைப்பதிவாளர்கள் மதுரை 98429-24015, உசிலம்பட்டி 94420- 56240 ல் தொடர்பு கொள்ளலாம் என, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் குமார் தெரிவித்துள்ளார்.

**வேளாண்மைத்துறைக்கு டில்லியில் விருது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,03:22 IST

திருநெல்வேலி:தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய தமிழக வேளாண்மைத்துறைக்கு டில்லியில் விருது வழங்கப்பட்டது.டில்லியில் நடந்த ராபி பருவ தேசிய வேளாண்மை கருத்தரங்கில் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய தமிழக வேளாண்மை துறைக்கு விருது வழங்கப்பட்டது. மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் சரத்பவார் விருது வழங்கினார். தமிழக வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் ராமமோகன் ராவ் பெற்றுக்கொண்டார்.விருது பெற்ற வேளாண்மை உற்பத்தி ஆணையர், வேளாண்மை ஆணையர், வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பாராட்டு தெரித்தார். கலெக்டர் ஜெயராமன், உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## உள்நாட்டில் இருப்பு குறைவாக உள்ளதால் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கக் கூடாது பிரதமருக்கு கருணாநிதி வேண்டுகோள்

*சென்னை, செப்.24–*

*உள்நாட்டில் இருப்பு குறைவாக உள்ளதால் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்–அமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

இதுதொடர்பாக முதல்–அமைச்சர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி

பருத்தி ஏற்றுமதி தொடர்பாக கடந்த மே மாதம் 19–ந் தேதி தங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்ததை நினைவூட்ட விரும்புகிறேன். அதில், அடுத்த பருத்தி விவசாயம் தொடங்கும் வரை பருத்தி ஏற்றுமதிக்கு தொடர்ந்து தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தேன். பருத்தி விவசாயம் தொடங்கிய பிறகு, உத்தேச விளைச்சலின் இருப்புநிலை மற்றும் உள்நாட்டு தேவைகளை மதிப்பீடு செய்த பின்னர் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கலாம் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். மத்திய அரசு அடுத்த மாதத்தில் (அக்டோபர்) இருந்து பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி கொடுக்க இருப்பதாக பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் என்னிடம் தெரிவித்த வண்ணம் உள்ளனர். தற்போது நாட்டில் போதிய அளவுக்கு பருத்தி இருப்பு இல்லாத நிலையில் ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது முரண்பாடாக உள்ளது. பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்படும் என்ற மத்திய வர்த்தக அமைச்சகத்தின் அறிவிப்பினைத் தொடர்ந்து, கடந்த 3 வாரங்களாக பருத்தி விலை மிக வேகமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்த விலை உயர்வை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

நூல் விலை உயரும்

இந்தியாவில் ஜவுளி உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. ஜவுளித்துறை ஏற்றுமதி மூலம் அதிகளவு அன்னிய செலாவணி கிடைப்பதோடு நாட்டில் லட்சக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்புகளும் கிடைத்து வருகிறது. அவர்களில் பெரும்பாலானோர் கைத்தறி நெசவாளர் களும், உடல் உழைப்புதொழிலாளிகளும்தான். பருத்தி விலை உயர்வு எதிரொலியாக நூலின் விலையும் உயரும். நூல் விலை உயர்ந்தால் கைத்தறிவு நெசவு கடுமையாக பாதிக்கப்படும்.

எனவே, பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கும் முன், உள்நாட்டில் பருத்தி தேவை பூர்த்தி அடைந்திருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியம். மேலும், சர்வதேச அளவில் ஜவுளித்துறையில் இந்தியாவுக்கு போட்டியாக திகழும் சீனா, பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளுக்குத்தான் நம் நாட்டில் இருந்து அதிகளவில் பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அனுமதி கூடாது

உள்நாட்டில் ஜவுளித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நியாயமான விலையில் பருத்தி

கிடைக்காவிட்டால் பருத்தியின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களான துணிமணிகள், பனியன்கள், ஆடைகள் ஆகியவற்றின் உற்பத்தி செலவு அதிகமாகும். அதன் காரணமாக சர்வதேச சந்தையில் நம்மால் குறைந்த விலையில் அவற்றை விற்பனை செய்ய இயலாமல் போகும். இந்த சூழ்நிலையில், உள்நாட்டு ஜவுளித்துறையினருக்கு நியாயமான விலையில் தரமான பருத்தி கிடைக்கச் செய்வதை உறுதிசெய்ய வேண்டும். அதன்மூலம் துணிமணிகளின் விலையை கட்டுப்படுத்த முடியும்.

எனவே, தற்போது உள்நாட்டில் பருத்தி இருப்பு குறைவாக இருப்பதையும், அடுத்த வரவிருக்கும் வாரங்களில் விலை உயர்வு அதிகரிக்க இருப்பதையும் கருத்தில் கொண்டு உள்நாட்டு தேவை பூர்த்தி அடையும் வரை தாங்கள் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 15.46%–ஆக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் செப்டம்பர் 11–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 15.46 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பால் மற்றும் ஒரு சில காய்கறிகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளதே இதற்கு காரணமாகும். தொடர்ந்து நான்கு வாரங்களாக உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் உயர்ந்து வருகிறது. முந்தைய வாரத்தில் இது 15.10 சதவீதமாக இருந்தது. சென்ற ஓர் ஆண்டுகாலத்தில், பால் விலை 23.41 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் மற்றும் காய்கறி விலை முறையே 10.33 சதவீதம் மற்றும் 6.84 சதவீதம்

அதிகரித்துள்ளது. பருப்பு வகைகள் (4.01 சதவீதம்), கோதுமை (9.21 சதவீதம்), அரிசி (5.52 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உய்ந்துள்ளது.
அதேசமயம், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலை முறையே 48.56 சதவீதம், 1.97 சதவீதம் குறைந்துள்ளது.
நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள சேதத்தால், உணவு பொருள்கள் விலை அதிகரித்துள்ளது. அதேசமயம், நடப்பு ஆண்டில், உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்க உள்ளதால், எதிர்காலத்தில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் குறைய வாய்ப்புள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## அடுத்த ஐந்து ஆண்டுகளில் உணவு தானியங்கள் சேமிக்கும் வசதியை 25% அதிகரிக்க திட்டம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு தானியங்கள் சேமிக்கும் வசதியை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 சதவீதம் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை ராஜாங்க அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.
இழப்பு
உற்பத்தியாகும் உணவு தானியங்களை சேமிக்கும் வசதி போதிய அளவிற்கு இல்லாததால், அவை வீணாகி விடுகின்றன. இதனால் ரூ.58,000 கோடி மதிப்பிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இவ்வாறு வீணாகும் உணவு தானியங்களை ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டு அண்மையில் தெரிவித்து இருந்தது.
நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்கம் மிகவும் உயர்ந்து வருவது மத்திய

*அரசுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. தானியங்களை சேமிக்கும் வசதியில் நம் நாடு பின்தங்கி இருப்பது கவலை அளிப்பதாக அமைந்துள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.*

*சென்ற பருவத்தில், இந்திய உணவுக் கழகம் உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்கள் 9.30 கோடி டன் உணவு தானியங்களை கொள்முதல் செய்தன. சேமிக்கும் வசதி இல்லாததால் இவற்றுள் 70,000 டன் உணவு தானியங்கள் வீணாகி உள்ளது. இந்த நிலை மீண்டும் ஏற்படாது என்றும், இதற்கு தீர்வு காணும் வகையில், நடப்பு நிதி ஆண்டில் கூடுதலாக 10 லட்சம் டன் உணவு தானியங்களை இருப்பு வைக்கும் வகையில் சேமிப்பு கிடங்கு வசதி மேம்படுத்தப்படும் என்றும் கே.வி.தாமஸ் மேலும் தெரிவித்தார்.*

*1.70 கோடி டன்*

*அடுத்த ஐந்து ஆண்டுகளில், மேலும் 1.70 கோடி டன் உணவு தானியங்கள் சேமித்து வைக்கும் அளவுக்கு இட வசதி அதிகரிக்கப்படும் என வேளாண் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*இந்திய உணவுக் கழகம் மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகியவற்றால் தற்போது 8.70 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்க முடியும். மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்துக்கு 487 சேமிப்பு கிடங்குகள் உள்ளன. இந்நிறுவனத்தின் உணவு தானிய சேமிப்பு கொள்ளளவு 1.06 கோடி டன்னாக உள்ளது. இந்நிறுவனத்தின் கிடங்குகளில் உணவு தானியங்கள் மட்டுமின்றி இதர பொருள்களும் சேமிக்கப்படுகின்றன. இந்நிறுவனம், இவ்வாண்டில் அதன் சேமிப்பு திறனை 1,77,300 டன் அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.*

*இந்திய உணவு கழகம்*

*இந்திய உணவு கழகத்திற்கு 1,500 சேமிப்பு கிடங்குகள் உள்ளன. இந்நிறுவனத்திடம் 7.64 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்கும் வசதி உள்ளது. உணவு தானியங்கள் சேமிப்பு வசதி குறித்து இந்நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, “சில இடங்களில் உள்ள கிடங்குகளில் உணவு தானியங்கள் திறந்த வெளியில் சேமிக்கப்படுகின்றன. உணவு தானியங்கள் வீணாவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இதற்கு தீர்வு காணும் வகையில், உணவு தானியங்கள் சேமிப்பு கிடங்கை அமைக்க தனியார் துறை நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இந்த கிடங்குகளை 10 ஆண்டுகளுக்கு வாடகைக்கு எடுத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.*

*பருவமழை சிறப்பாக உள்ளதையடுத்து, தானியங்கள் உற்பத்தி 21.80 கோடி டன்னாக*

*இருக்கும் என மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார். எனவே, சேமிப்புக் கிடங்கு வசதியை அதிகரிக்க வேண்டியது மிக அவசியமாகும்.*

# தேங்காய் விலை உயர்வால் ஓட்டல்களில் மாயமாகிப் போனது தேங்காய்ச்சட்னி

**திருமங்கலம்** ,*செப்.23–*

**கடுமையான வறட்சி காரணமாக தென்னை மரங்கள் வாடி வதங்கியதாலும், தேங்காய்....**

**விலை அதிகரிப்பாலும் திருமங்கலம் பகுதி ஓட்டல்களில் தேங்காய்ச்சட்னி என்பதே மாயமாகிப் போனது. இதனால் சாப்பாட்டு பிரியர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.**

**கடந்த சில ஆண்டுகளாகவே பருவமழை பொய்த்து வருவதால் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவி வருகிறது. விவசாயத்திற்கு தேவையான அளவு மழை இல்லாததால் நிலத்தடி ஞ்ர் மட்டமும் குறைந்து தண்ணீர் பற்றாக்குறையும் நிலவி வருகிறது. இந்த வறட்சியின் கோரப் பிடியில் சிக்கி தென்னை மரங்கள் வாடி வருகிறது. இதன் காரணமாக தேங்காயின் விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது.**

**இந்த விலை உயர்வு திருமங்கலம் பகுதியில் பெரிய தேங்காய் ரூ 15 எனவும், சிறிய தேங்காய் ரூ 9 க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஏறுமுகத்தில் இருக்கும் தேங்காயின் விலை உயர்வால் வீடுகளிலும், ஓட்டல்களிலும் தேங்காய்ச்சட்னி என்பது புழக்கத்தில் இருந்து திடீரென மாயமாகிப் போனது. இதற்கு பதிலாக புதினா, தக்காளி, மிளகாய் போன்ற சட்னி வகைகள் பரிமாறப்பட்டு வருகிறது. தேங்காயின் விலை உயர்வால் மாயமாகிப் போன தேங்காய்ச்சட்னி குறித்து சாப்பாட்டு பிரியர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.**

# நெல்,மிளகாய் பயிர்களுக்கு காப்பீடு திட்டத்தில் சேர அவகாசம் நீட்டிப்பு:

ராமநாதபுரம் ,*செப்.23*

ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் ஷாபீமா....

மழைக் காப்பீட்டு திட்டம் நெல் சம்பா மற்றும் மிளகாய் பயிர்களுக்கு நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.இத்திட்டம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வரையறுக்கப்பட்ட பகுதியில் பருவகால மழையின் மாற்றங்களை அனுசரித்து விவசாயிகளின் குறைவான விளைச்சல் இழப்பீட்டினை காப்பீடு மூலம் ஈடுசெய்யும்.

இத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நெல் மற்றும் மிளகாய் பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் சேர்ந்து பயன்பெறலாம்.இத்திட்டத்தில் சேர விவசாயிகள் அவர்களது பெயரிலேயே சேமிப்பு வங்கி கணக்கு வைத்திருக்க வேண்டும்.பிரிமியத் தொகையை வரைவேலை மூலம் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும்.இத்திட்டத்தில் விவசாயிகள் சேருவதற்கான கடைசி நாள் 25-09-2010 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.ஆகவே விவசாயிகள் தங்கள் பகுதியில் இத்திட்டத்தின் முகவர்களை அனுகி பிரிமியத்தை வரைவோலையாக எடுத்து முன்மொழிவு படிவத்துடன் பட்டா இணைத்து இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.